பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

உதயன்

விலை ரூபா 6-00

மலர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 06 வியாழக்கிழமை (21-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily இதழ் 278

# படை முகாம்களுக்கு நேரில் செல்ல
# ராணுவத் தளபதிகளுக்கு உத்தரவு!

## எழுதுமட்டுவாழ் சம்பவம்: 6 படையினரும் காவலில்!

கொழும்பு, நவ. 21

தென்மராட்சி எழுதுமட்டுவாழ் பகுதியில் புதைகுழிகளுக்குள் இருந்து கடந்த ஞாயிறன்று ஆறு சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டது தொடர்பாக கைது செய்யப்பட்ட நான்கு இராணுவத்தினரையும் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு பிரதம நீதிவான் முனிதாஸ நாணயக்கார உத்தரவிட்டார்.

இச்சந்தேக நபர்களை கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சாவகச்சேரிப் பொலீஸார், இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை என்பதால் அவர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க வேண்டும் எனக் கோரினர். அதனை நீதிவான் ஏற்றுக்கொண்டார். (உ-3)

## கொடிகாமத்தில் கிளைமோர் தாக்குதல்!

### 2 படையினர் பலி; 6 பேர் காயம்

கொழும்பு, நவ. 21

நேற்றுக் காலை 8.00 மணியளவில் கொடிகாமம் இராமாவில் பகுதியில் இராணுவ வாகனம் ஒன்று கிளைமோர் கண்ணிக்கு இலக்கானதாகத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தில் படையினர் பயணம் செய்த வாகனம் தீப்பிடித்துக் கொண்டதாகவும்—

இரு படையினர் உயிரிழந்ததாகவும்—

ஆறு படையினர் காயமடைந்ததாகவும்—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது.

கொடிகாமம் கண்டி வீதிக்கு அருகில் உள்ள ஒழுங்கை ஒன்றில் தாக்குதலுக்கு உள்ளான வாகனம் நேற்று எரிந்த வண்ணம் காணப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலிருந்து இன்று மூன்று கப்பல்கள் புறப்பாடு

கொழும்பு, நவ. 21

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதிப் பயணிகளுடன் 3 பயணிகள் கப்பல்கள் காங்கேசன்துறை நோக்கி இன்று புறப்படவிருப்பதாகத் திருகோணமலையில் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — நேற்று முன்தினம் மாலை காங்கேசன்துறைக்கு வந்த கப்பலில் பயணம் செய்த பயணிகள் நேற்று முன்தினம் இரவு புன்னாலைக்கட்டுவன் பகுதி ஆலயம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டு நேற்றுக்காலை யாழ். நகருக்கு அழைத்து வரப்பட்டனர்.

இங்கிருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் அக்கப்பல்கள் நேற்றுத் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டன. (உ-150-3-100)

## மட்டக்களப்புப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு!

மட்டக்களப்பு, நவ. 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மேற்குப்புறப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் காலை பரவலாக விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

செங்கலடிக்கு மேற்கே பதுளை வீதியில் அமைந்துள்ள கிராமங்களிலும், கிரானுக்கு மேற்கேயுள்ள பூலாக்காடு, திகிலி வட்டை பகுதிகளிலும் 'புக்காரா' விமானம் பறந்து திரிந்தது.

அதன் பின் காலை 9 மணியளவில் விமானத்தில் இருந்து ஷெல் மற்றும் குண்டுத் தாக்குதல்கள் அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் மாவீரர் தினக் கொண்டாட்டங்களை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

— இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டது.

தொப்பிகல காட்டுப் பகுதியிலும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3-4)

## வடக்கில் அத்துமீறல்களைத் தடுக்க பாதுகாப்புச் செயலர் நடவடிக்கை

கொழும்பு; நவம்பர் 21

**வடபகுதியில் நிகழக்கூடிய இராணுவ அத்துமீறல்களைத் தவிர்ப்பதற்காக அப்பகுதிகளில் உள்ள தளபதிகள் தமக்குக் கீழ் உள்ள ஒவ்வொரு முகாமுக்கும் நேரில் விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைக் கவனித்து உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்,**

**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா சகல தளபதிகளுக்கும் இவ்வாறு பணிப்புரை விடுத்திருக்கின்றார்.**

வடபகுதியில் நிகழும் இராணுவ அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்து ஈ.பி.டி.பி யின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். சந்திரகுமார், எஸ். சிவதாசன் ஆகியோர் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சில், அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவைச் சந்தித்து, அவரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

அப்போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது பற்றிய தகவலை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வெளியிட்டதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

''யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதைவிட மனித

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்து யுத்தம்புரிய ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பு முடிவு?

சென்னை, நவ. 21

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் (ஈ.என்.டி.எல்.எவ்வின்) முன்னூறுக்கும் அதிகமான போராளிகள் புலிகளுடன் இணைந்து போராடுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.

— இவ்வாறு அண்மையில் வன்னிக் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய ஈ என் டி.எல்.எவ். அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

கடந்த சனிக்கிழமை தமிழகத்தில் வெளியான 'தினமணி' நாளிதழ் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பின் தலைவர்களில் ஒருவர் பாக்கியநாதன் ராஜரத்தினம் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சராக இருந்தவர். அவரும் லண்டனில் உள்ள ஈ. என். டி. எல். எவ். பிரதிநிதி முஸ்தபாவும் கடந்த மாதம் இலங்கையின் கிளிநொச்சிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரத்வத்தையுடன் தமிழ் எம். பிக்களும் வவுனியா அகதிமுகாம்களுக்குவிஜயம்

### அவை திறந்தவெளிச்சிறைகள் என்கின்றனர் எம்.பிக்கள்

வவுனியா, நவ. 21

வடபகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வருவோரைத் தங்க வைத்துள்ள வவுனியா நலன்புரி நிலையங்கள் மற்றும் அகதிமுகாம்களுக்குப் பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகித்த குழு ஒன்று நேற்று முன்தினம் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டது

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, இனவிவகார நல்லிணக்க பிரதி அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, பெருந்தோட்டப் பிரதி அமைச்சர் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், நீலன் திருச்செல்வம், ஆறுமுகம் தொண்டமான் உட்பட 18 பேர் இக்குழுவில் வந்திருந்தனர்.

பூந்தோட்டக் கல்வியியல் கல்லூரியில் உள்ள நலன்புரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், நவ. 21

பூநகரி கொக்காவில் பகுதிகளில் கிபிர் ஜெட் விமானங்கள் [illegible] குண்டு வீச்சுக்களை நடத்தியதாக செய்தி ஏ.எஃப்.பி. ஒன்று தெரிவித்தது. (உ-4)

### புலிகளின் மிரட்டலை அடுத்து

## பதுளை - கொழும்பு இரவு ரயில் சேவை ரத்து

கொழும்பு, நவ. 21

பாதுகாப்புக்காரணங்களை முன்னிட்டு கொழும்புக்கும் - பதுளைக்கும் இடையிலான இரவு நேர ரயில் சேவைகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளன.

ரயிலைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக விடுதலைப் புலிகள் மிரட்டியிருப்பதாக இரகசியத் தகவல் ஒன்று பொலீஸாருக்கு கிடைத்ததை யடுத்தே இந்த சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மிரட்டல் கிடைத்ததாக ஹப்புத்தளை ரயில் நிலைய அதிபரே பொலீஸாருக்கு தகவல் தந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் தகவல் உடன் பாதுகாப்பு, போக்குவரத்து

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

# திருமணம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாது வருஷம் கார்த்திகை மாதம்
6 ஆம் நாள் இன்று (21 - 11 - 1996) வியாழக்கிழமை ஏகாதசி திதியும்
ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில்
நண்பகல் 11 - 00 மணிக்கு மேல் 1-22 மணிக்குள் (பழைய நேரம்)
கும்பலக்கின முகூர்த்தத்தில்

கந்தையா தம்பதிகளின்
புதல்வன்
திருநிறை செல்வன்
**மகேந்திரன்**
(இறப்பொடை
தமிழ் மகா வித்தியாலயம்)



கருப்புசாமி தம்பதிகளின்
புதல்வி
திருநிறை செல்வி
**மகாலக்ஷ்மி**
(சாம்பல் தீவு
மகாவித்தியாலயம்,
திருகோணமலை)

ஆகிய இருவருக்கும் திருமாங்கல்யதாரணம் செய்ய
பெரியோர்களால் நிச்சயித்து மேற்படி திருமணம் கம்பளை ஸ்ரீ கதிரேசன் கோயில்
மண்டபத்தில். நடைபெறுவதால் தாங்கள், தங்கள் குடும்ப சகிதம்
வருகை தந்து மணமக்களை வாழ்த்தி, ஆசீர்வதிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு. திருமதி கந்தையா தம்பதிகள்,
செல்வகந்த கிராமம்,
இரட்டைப்பாதை.

திரு. திருமதி கருப்புசாமி தம்பதிகள்,
இல: 3/7, கதிரேசன் கோயில் வீதி,
மாத்தளை.

இருவீட்டார் அழைப்பு

அறிவிப்பாளர்கள்:

திரு K. சந்திரன்,
கணேசா களஞ்சியம்,
(ரஞ்சன் கடை)
இல; 59, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு K. கண்ணன்,
கண்ணன் களஞ்சியம்,
கேணியடி.
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(சி-3534)

# வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,
## சுழிபுரம்.

## சந்தைகள்/ இறைச்சிக் கடைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் - 1997

01. கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி:- **1996-11-26** பிற்பகல் 1-00மணிவரை
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- **1996-11-27** முற்பகல் 11-00 மணி வரை.
03. கேள்விகள் திறக்கும் திகதி:- **1996-11-28** முற்பகல் 11-00 மணி.
04. ஏனைய விவரங்கள் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம்: | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப் பத்திரப் பணம் மீளளிக்கப் படாதது | |
|---|---|---|---|---|
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 1. சத்தியக்காட்டுச் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு உட்பட) | 1,00,000/- | 3,000/- | 200/- | |
| 2. பல்லசுட்டிச் சந்தை | 10,000/- | 500/- | 50/- | |
| 3 தொல்புரம் மத்திய சந்தை | 10,000/- | 500/- | 50/- | |
| 4. பொன்னாலைச் சந்தை (மூளாய்) | 15,000/- | 500/- | 50/- | |
| சங்கானை உப அலுவலகம் | | | | |
| 1. பொது மரக்கறிச் சந்தை (துவிச் சக்கரவண்டிப் பாதுகாப்பு உட்பட) | 2,50,000/- | 5,000/- | 300/- | |
| 2. மீன் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு உட்பட) | 65,000/- | 20,000/- | 200/- | |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 1. பொதுச் சந்தை | 12,000/- | 500/- | 100/- | |
| சுழிபுரம் உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 15,000/- | 500/- | 100/- | ★ |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | 6,000/- | 500/- | 100/- | ★ |
| சங்கானை உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 1,00,000/- | 3,000/- | 200/- | ★ |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | 30,000/- | 500/- | 100/- | ★ |
| 3. கருவாட்டுக்கடை | 5,000/- | 500/- | 100/- | ★ |
| வட்டுக்கோட்டை உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 1,00,000/- | 3 000/- | 200/- | ★ |
| 2 ஆட்டிறைச்சிக்கடை | 20,000/- | 500/- | 100/- | ● |
| அராலி உப அலுவலகம் | | | | |
| 1. மாட்டிறைச்சிக்கடை | 30,000/- | 1,000/- | 100/- | ● |

★ மாத வாடகை: சபையின் உப அலுவலகங்களில் வாடகை செலுத்த வேண்டும்.
● கேள்விக்காரர் கடை ஒழுங்கு செய்ய வேண்டும்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

வலி-மேற்கு பி. ச. தலைமை அலுவலகம்,
சுழிபுரம், 15-11-1996.

(சி-3339)

# மரண அறிவித்தல்கள்

## கதிரிப்பிள்ளை இராசரத்தினம்

(தெல்லிப்பளை)
(முன்னாள் C T. B உத்தியோகத்தர்)

மயிலங்கூடலைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரிப்பிள்ளை இராசரத்தினம் 17-11-96 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் தவநாயகியின் அன்புக் கணவரும், தர்ஷ்னி, தனுஷா, தர்ஷன் (யூனியன் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை - ஆச்சிக்குட்டி ஆகியோரின் மகனும், திரு. அப்புத்துரை, காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் மருமகனும், இராசலிங்கம், காலஞ்சென்ற இராசலக்ஷ்மி, இராசமணி, இராசபூபதி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை (21-11-96) காலை 10 மணிக்கு துரை வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தவநாயகி
(மனைவி)

துரை வீதி,
இணுவில் தெற்கு.

(8991)

## திருமதி பொன்னு திருநாவுக்கரசு

வேலணை மேற்கு சிற்பனை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற திரு சு. திருநாவுக்கரசு (அப்பையா) அவர்களின் அன்பு மனைவியுமான திருமதி பொன்னு திருநாவுக்கரசு காலமாகி விட்டார்.

அன்னார் திருமதி மல்லிகா - சீவரத்தினம், (ஆசிரியை, யா/ இந்து மகளிர் கல்லூரி) திருமதி பவுஸ்டா அரசரத்தினம் (ஆசிரியை, நெடுந்தீவு கொன்வென்ற்) தனலட்சுமி, சிவநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் கை. சீவரத்தினம் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி) க அரசரத்தினம் (A.O கோட்டக் கல்வி அலுவலகம், நெடுந்தீவு) வசந்தமல்லிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருமதி இரத்தினம் பேரம்பலம், திருமதி சிவபாக்கியம் கனகரத்தினம், திருமதி இராசமணி நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-11-96) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கை. சீவரத்தினம்
(மருமகன்)

78, இந்துக் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(8990)

## இராமுப்பிள்ளை கனகசபை

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட விஸ்வ குல திலகர் இராமுப்பிள்ளை கனகசபை அவர்கள் [ஆசாரியார்] 20 - 11 - 96 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், வரதராசா (வ. பி. போ. சபை, கோண்டாவில்), கந்தசாமி (ஓய்வு பெற்ற படவரைஞர், கட்டடத் திணைக்களம்), சிவபாலசிங்கம் (யாழ். போதனா வைத்தியசாலை), நாகேந்திரன் (சுங்கத்திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கார்த்திகேசுவின் அன்புச் சகோதரரும், வள்ளிநாயகி, பவானி, கோசலாதேவி, தவளாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேஸ், சுனிதா, சுபானி, சயந்தன், கௌரி, பிருந்தா, ஜெயகாந், சந்திரகாந், கௌசிகா, சிவரங்கன், கௌதமி, திருக்குமரன் பூரணி, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (20-11-96) புதன்கிழமை அரியாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. வரதராசா
(மகன்)

89, கலைமகள் வீதி,
அரியாலை.

(43477)

## தாமு மாணிக்கம்

கரம்பகம், எழுதுமட்டுவாளைச் சேர்ந்த தாமு-மாணிக்கம் 05 - 10 - 1996 அன்று அகால மரணமானார்.

அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், வானதி, வினோதினி, நிஷாந்தினி, சிவகரன், சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தாமு- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வல்லிபுரம்,காலஞ்சென்ற இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மயில்வாகனம், நடராசா, விநாயகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கராசா, யோகராசா, முருகேசு (உதவி புகையிரத நிலைய அதிபர், திருகோண-மலை), மார்க்கண்டு (எழுதுவினைஞர், மாவட்ட நீதி மன்று, மல்லாகம்), மாணிக்கம், முத்துக்குமாரு (ஆசிரியர் யா/ விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், மீசாலை), அன்னம்மா, சிவசோதி (ஆசிரியை, யா/ குமரணி வித்தியாலயம், வரணி). யோகேஸ்வரி, சிவானந்தன், ஞானக்கொழுந்து (சுவிஸ்), சாரதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மார்க்கண்டு
(மைத்துனர்)

பருத்தித்துறை

(43742)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை மறுதினம்

# பெங்களூரில் உலக அழகிப் போட்டி: தடை விதிப்பதற்கு நீதிமன்றம் மறுப்பு

பெங்களூர், நவ. 21

பெங்களூரில் அடுத்த சனிக்கிழமை நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் உலக அழகி இறுதிப் போட்டிகளுக்கு தடைவிதிக்குமாறு கோரி பெண்கள் அமைப்பு ஒன்றின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை கர்நாடக மாநில மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் தள்ளுபடி செய்தது.

எனினும் இந்தப் போட்டிகளில் ஆபாசம் இடம் பெறக்கூடாது என்பது உட்பட சில கட்டுப்பாடுகளை நீதிமன்றம் விதித்தது.

நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி உலக அழகிப் போட்டி சனிக்கிழமை பெங்களூரில் நடைபெறுவது பெரும்பாலும் உறுதியாகி விட்டது. ஆனால் இந்த நிகழ்வு குறித்த சர்ச்சைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன.

இந்தத் தடையுத்தரவுக்கு நீதிமன்றத்திடம் விண்ணப்பித்த பெண்கள் அமைப்பின் தலைவி இந்த நிகழ்ச்சி ஒரு 'கலாசார படை எடுப்பு' என விவரித்தர். இந்த நிகழ்ச்சியை எதிர்த்துத் தாம் தீக்குளித்து இறக்கப் போவதாக அவர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் இறுதிப் போட்டிகள் பெங்களூர் சின்னத்தம்பி கிரிக்கெட் மைதானத்தில் இந்த வாரத்தில் நடைபெறும் போது அந்த இடத்தில் முற்றுகையிடத் தயாராகி வருவதாக வலது சாரி இந்து பாரதிய ஜனதாக் கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

மைதானத்தைச் சுற்றி 24 மணி நேரமும் பொலீஸ்காவல் போடப்பட்டுள்ளது.

ஆனால் இப்போட்டிகளைக் காணவரும் சுமார் 20 ஆயிரம் பார்வையாளர்களுக்குள் இப்போட்டியை எதிர்ப்பவர்களும் ஊடுருவுவார்கள் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

45 வருட வரலாற்றைக் கொண்ட உலக அழகுராணிப் போட்டி இம்முறை தான் இவ்வாறான எதிர்ப்பை எதிர்கொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

ஜெயலலிதா தொடர்பான வழக்கு

# விசாரணை நடத்துவதற்கு சி.பி.ஐ. குழு பிரிட்டனுக்கு!

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவும், சசிகலாவும் வெளிநாட்டில் இருந்து 5இலட்சம் டொலர் பெறுற்கொண்ட வழக்குத் தொடர்பான புலனாய்வை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் மத்திய புலனாய்வுப் பிரிவின் (சி.பி. ஐயின்) குழுக்கள் பிரிட்டனுக்கும் டுபாய்க்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சி.பி.ஐயின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுக்கள் வெளிநாடுகளில் சர்வதேசப் பொலீஸார், வெளியுறவுத் துறையினர் நடத்தும் விசாரணைகளுக்கு உதவி செய்வார்கள் என சி.பி.ஐ செய்திகள் தெரிவித்தன. (உ-10)

ஆட்சிக் கலைப்பை ஆட்சேபிக்கும்

# பெனாஸிரின் மனுவை ஏற்க நீதிமன்றம் மறுப்பு

இஸ்லாமபாத், நவ. 21

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தனது அரசு பதவி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்த மனு ஒன்றை பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் பூர்வாங்க விசாரணை கூட நடத்தாமல் திருப்பி அனுப்பியது.

இந்த மனுவிலுள்ள சில பகுதிகள் அவதூறானவை, ஏற்றுக்கொள்ள முடியாதவை என நீதிமன்றம் தெரிவித்தது. ஆனால் எதைப்பற்றி நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்துள்ளது என்பதைக் குறிப்பிடவில்லை.

அதே சமயம் தேசிய சட்டமன்றத்தைக் கலைக்கும்படி ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து கலைக்கப்பட்ட நடாளுமன்றத்தின் சபாநாயகர் சமர்ப்பித்த மனுவை அடுத்த புதன் கிழமை பூர்வாங்க விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. (உ-10)

## பாப்பரசர் கியூபா செல்வார்

வத்திக்கான் நவம். 21

புனித பாப்பரசர் கியூபாவுக்கு விஜயம் செய்ய வேண்டுமென அந்தநாட்டு அதிபர் பிடல் காஸ்ட்ரோ விடுத்த வேண்டுகோளை பாப்பரசர் ஏற்றுக்கொண்டுள்ளார் என வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த விஜயம் அடுத்த ஆண்டு இடம்பெறும்.

உலகில் தற்போதிருக்கும் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான பிடல் காஸ்ட்ரோ கம்யூனிசத்தை வலுவாக எதிர்க்கும் பாப்பரசரை வத்திக்கானில் முதன் முதலாக சந்தித்த பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (உ-10)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## வெளிவாரிப் பட்டப்படிப்புப் பதிவு

1995/96

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1995/96 கல்வியாண்டுக்குப் பின்வரும் கற்கைநெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வுநாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது 1996 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1. வர்த்தகர் முதற்கற்கை நெறி
2. கலை முதற்கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி 1
4. சிறப்புக் கலைமாணி பகுதி 1
5. வர்த்தக மாணி பகுதி 1

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி 1 கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்:

இந்து நாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்.

விண்ணப்பப்படிவங்களுக்கு உரிய விவரங்களை வெளிவாரிப் பதிவுகள், பரீட்சைகள் அலகு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம்.

★ விண்ணப்பப்படிவம் ரூபா. 15. 00
★ பாடத்திட்டமும் விதிமுறைகளும் (முதற்கலை/ முதல் வர்த்தக. நெறிகளுக்கானது) ரூபா. 35. 00
★ பாடத்திட்டம் (சிறப்புக்கலைமாணி, வர்த்தகமாணி பகுதி 1 பாட நெறிகட்கு) ரூபா. 50. 00
★ பாடத்திட்டம் (பொதுக்கலைமாணி பகுதி 1- ஒவ்வொரு பாடத்திற்கும்) ரூபா. 15. 00
★ விதிமுறைகள் — கைநூல் (சகல பகுதி 1 பாடநெறிகளுக்கும்) ரூபா. 25. 00

விண்ணப்பப்படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் உரிய தொகையைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் பெற விரும்புவோர் தமது பாடநெறியை / கற்க விரும்பும் பாடங்களைக் குறிப்பிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை / தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிடப்பட்ட ரூ. 12/50 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X 20 செ. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ்வறிவித்தல் ஏற்புடையதல்ல.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(சி-3582)


## உலக அரங்கில்

### திரேஸாவுக்கு அமெரிக்க குடியுரிமை

கல்கத்தா, நவ 21

கல்கத்தாவில் உள்ள துறவு சபை இல்லத்தில் கடந்த சனியன்று நடைபெற்ற நிகழ்ச்சியின் போது அன்னை திரேஸாவுக்கு அமெரிக்காவின் கௌரவக் குடியுரிமை வழங்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் கிளின்ரன் மற்றும் அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட குடியுரிமைச் சான்றிதழ் அன்னை திரேஸாவிடம் வழங்கப்பட்டது.

இதற்கு முன்னர் 1985 ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபராக இருந்த றொனால்ட் றேகன் அந்நாட்டின் உயர்ந்த கௌரவ விருதான சுதந்திரப் பதக்கத்தை அன்னை திரேஸாவுக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கது. (இ-10)

### ஐ. நா. வுக்கான ஆப்கன் பிரதிநிதி யார்?

காபூல், நவ. 21

தலிபான் அரசுதான் முறையான அரசு எனவும் அதனை ஐ. நா. சபை அங்கீகரிக்க வேண்டும் எனவும் ஐ. நா. வைத் தலிபான் கோரியுள்ளது.

தலிபான் அரசின் தகவல் மற்றும் கலாசாரத்துறை அமைச்சர் மூல்லா அமீர்கான் முஸ்தாக்கி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. வுக்கான ஆப்கானிஸ்தான் அரசின் பிரதிநிதியாக [illegible] [illegible] பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## 1994/95 கல்வியாண்டிற்குப் பதிவுகளைப் புதுப்பித்தல்

1993/94 ஆம் கல்வியாண்டிற்குப் பதிவு செய்து அண்மையில் நடைபெற்ற வருடாந்த வெளிவாரிப் பரீட்சை 1994 இற்குத் தோற்றிய மாணவர்கள், 1994/95 ஆம் கல்வியாண்டிற்குத் தமது பதிவுகளை 1996 டிசம்பர் 31 இற்குள் புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இதற்கான விண்ணப்பப் படிவங்களை வெளிவாரிப் பதிவுகள், பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ள முடியும்.

— பதிவாளர்

(சி/3531)


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை நாகமணி
(இளைப்பாறிய இ. போ. ச. சாரதி)

தோற்றம்: 22 – 06 – 1926
மறைவு: 05 – 11 – 1992
திதி: 21 – 11 – 1996

ஆறு முருகனுக்கு அருகில்
ஆறு அருமை மைந்தர்களையும்
தவப்புதல்வியையும் பெற்று
பேரும் புகழுமாய் வாழ்வித்த அப்பாவே!
எம்மைப் பிரிந்து நான்கு ஆண்டுகள்
சென்றாலும் எங்கள் மனதில் உங்கள்
நினைவலைகள் விட்டகலாத
ஒளி விளக்கே அப்பா!

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"சுகிர்தா பவனம்"
449, இராமலிங்கம் றோட்,
நல்லூர்.
(8988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி முறை: லலித் அணி விடாப்பிடி!

இலங்கையில் ஒற்றையாட்சி அரசமைப்பே பேணப்பட வேண்டும் என்று லலித்தின் கட்சியான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் இளைஞர் அணி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த அணியின் முதலாவது ஆண்டு மாநாடு கடந்த சனிக்கிழமை நாரஹேன் பிட்டியில் நடந்த சமயமே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றும் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது (உ-150-8)

## விவசாயிகளின் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் நவம்பர் மாதத்துக்கான கொடுப்பனவு எதிர்வரும் 25 ஆம் திகதி கமந்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது. என கமநல சேவை திணைக்களம் தெரிவித்தது. (உ)

---



## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

சுன்னாகம்

## 1997 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள், கடைகள் என்பவற்றை 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் **1996-12-09** ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளரால் கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப் பணம் ஆகியன செலுத்தியதன் பேரில் **1996-12-08** ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். கேள்விப் பத்திரங்களை உடுவில் உப அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப் பிரதியை ''விசேட ஆணையாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை ''பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச செயலகம், உடுவில்'' என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலம் **1996-12-09** ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன் வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்திலும் உடுவில் உப அலுவலகத்திலும் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டிகளில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் **1996-12-11** ஆம் திகதி மு ப. 10-00 மணிக்கு பிரதேசசபை தலைமையலுவலகத்திலும் உடுவில் உப அலுவலகத்திலும் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப் பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் தவறாது கொண்டு வருதல் வேண்டும். தனியார் காணிகளில் இறைச்சிக்கடை நடத்துவதற்கு காணிச் சொந்தக்காரரிடமிருந்து அனுமதிக்கடிதம் பெற்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமையலுவலகத்திலோ அல்லது உடுவில் உப அலுவலகத்திலோ அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
18-11-96.

### அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திர பணம் | கேள்வி வைப்பு பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 01. சுன்னாகம் மத்தியசந்தை (மாதாந்த வாடகைக்குரிய கடைகள் தவிர்ந்த) | — | 100/- | 2,000/- | 1,60,000/- |
| 02. சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை (மீன் சந்தையில் அமைந்துள்ளது) | 100/- | 100/- | 2,000/- | 1,15,000/- |
| 03. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை (மீன் சந்தையில் அமைந்துள்ளது) | 100/- | 100/- | 1,000/- | 15.000/- |
| 04. உடுவில் கீளிச்சந்தை | — | 100/- | 1,000/- | 10,000/- |
| 05. உமல், கடதாசி விற்பனை செய்யும் உரிமை (மீன் சந்தையில் அமைந்துள்ளது) | — | 50/- | 500/- | 1,000/- |
| 06. பின்வரும் 05 கடைகளும் மீன்சந்தையில் அமைந்துள்ளது. | | | | |
| கருவாட்டுக் கடை இல 3 | 60/- | 50/- | 100/- | 1,500/- |
| கருவாட்டுக் கடை இல. 4 | 60/- | 50/- | 100/- | 3,500/- |
| கருவாட்டுக் கடை இல. 5 | 60/- | 50/- | 100/- | 3,100/- |
| கருவாட்டுக் கடை இல 6 | 60/- | 50/- | 100/- | 1,250/- |
| கருவாட்டுக் கடை இல. 7 | 60/- | 50/- | 100/- | 1,250/- |
| 2. உடுவில் உப அலுவலகம் | | | | |
| 01. மருதனார்மடம் சந்தை | — | 100/- | 2,000/- | 8,00,000/- |
| 02. இணுவில் சந்தை | — | 100/- | 1,000/- | 4,000/- |
| 03. உடுவில் மல்வம் மாட்டிறைச்சிக் கடை | — | 50/- | 500/- | 38,200/- |
| 04. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | — | 50/- | 500/- | 80,100/- |
| 05. தாவடி தெற்கு மாட்டிறைச்சிக் கடை | -- | 50-/ | 500/- | 35,000/- |
| 06. உடுவில் ஆலடி மாட்டிறைச்சிக் கடை | — | 100/- | 500/- | 40,000/- |
| 07. இணுவில் சந்தைவெளிக் கடைகள் :- | | | | |
| கடை இல 01ம் 02ம் | — | 25/- | 100/- | 900/- |
| கடை இல. 08 | — | 25/- | 100/- | 500/- |
| கடை இல. 09 | — | 25/- | 100/- | 500/- |
| கடை இல. 13 | — | 25/- | 100/- | 1,100/- |
| 3. ஏழாலை உப அலுவலகம் | | | | |
| 01. ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | — | 50/- | 300/- | 55,000/- |

(சி-3533)





## பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

சங்கப் பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கு:

## 15 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் 15 - 12 - 1996

மேற்படி சங்கத்தின் 15 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சூரியகதிர்-2 இராணுவ நடவடிக்கை காரணமாக 21 - 04 - 1996 இல் கூட்ட முடியாமல் போனமைக்கு வருந்துகின்றோம்.

சங்கத்தின் 15 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தை 1996 - 12 - 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 . 30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. ச. செல்வரத்தினம் அவர்கள் தலைமையில் சங்கக் காரியாலய கூட்ட மண்டபத்தில் கூட்டவேண்டுமென பணிப்பாளர் சபை தீர்மானித்துள்ளது என்பதனை தங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உபவிதி 43 இன் பிரகாரம் மேற்படி வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏதாவது பிரேரணையைப் பிரேரிக்க விரும்பும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் அப்பிரேரணையின் பிரதியொன்றை 01 - 12 - 96க்கு முன்னர் சங்கப் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்மெனக் கேட்டுக்கொள்கின்றோம். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் பிரேரணைகள் வருடாந்த பொதுக் கூட்ட நிகழ்ச்சிநிரலில் இடம் பெறமாட்டாது என்பதனையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

தற்போதைய சூழ்நிலை காரணமாக பொதுச் சபைப் பிரதிநிதிகளுக்கு தனிப்பட்ட முறையில் அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம். மேற்படி அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி.

சங்கக்காரியாலய தற்காலிக முகவரி:-
பிரதான வீதி, (பொன்னாலை றோட்)
சங்கானை.

ச. செல்வரத்தினம்
தலைவர்.

ஆ. நாகராசா
செயலாளர்.

(சி-3535)





## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் வா. அருண்குமார்

(பட்டு)

தோற்றம்: 11 – 06 – 1976

மறைவு: 23 – 10 – 1996

இவர் தெல்லிப்பளை முதலியார் வளவைச் சேர்ந்த நவரட்ணம் வாமதேவன் — ஜெயராணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், திருமதி அருண்குமார் றஜனியின் அன்புக்கணவரும், செல்வி மேரி ஸ்டெல்லாவின் அருமைத் தந்தையும், சோதிடர் இ. மனோகரன் கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவசகாயம், அமலதாசன், யசிந்தா, சகாயநாதன், கமலநாதன், சோதிநாதன், பஞ்சறவி, விமலறூபன் ஆகியோரின் அன்பு மருமகனும், அனுஷா, கெங்காதேவி, ஆன்மேரி, லவயூலி, சோபிகா, விமலினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ச. புஸ்பராசா, மலர் ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரது அகால மறைவையொட்டி யா/ புனித அடைக்கல மாதா ஆலயத்தில் 22-11-1996 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு அன்னாரின் ஆத்மாசந்திக்காக நடைபெறும் இரங்கல் திருப்பலிப் பூசையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு இல்லத்திற்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரது பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், மனைவி, மகன்,
சகோதரிகள், மாமன், மாமி,
குடுபத்தினர்.

215/9, இராசாவின் தோட்டம் வீதி,
அருள்மாதா கோயிலடி,
யாழ்ப்பாணம். (43745)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
பொது சன நூலகம்.

# கிருஷாந்தி வழக்கு யாழ். நீதிமன்றில்;
# எதிரிகள் தரப்புக் கோரிக்கை ஏற்பு

கொழும்பு, நவ. 21

கைதடி மாணவி கிருஷாந்தி மற்றும் அவரது தாயார், சகோதரர், அயலவர் கொலை செய்யப்பட்ட வழக்கு யாழ். நீதிமன்றத்திலேயே நடைபெறவுள்ளது.

இந்த வழக்கை யாழ். நீதிமன்றத்திலேயே விசாரிக்க வேண்டும் என்று சந்தேக நபர்கள் தரப்பு சட்டத்தரணி ஜோசப் சாள்ஸ் நீதிமன்றத்தில் விடுத்த கோரிக்கையை கொழும்பு பிரதம நீதிவான் முனிதாஸ நாணயக்கார ஏற்றுக் கொண்டார்.

கடந்த திங்களன்று இந்த வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது—

சந்தேக நபர்களான இராணுவத்தினர் சார்பில் ஆஜரான அவர் இந்த வழக்கை கொழும்பு நீதிமன்றத்தில் விசாரிக்க நியாயாதிக்கம் இல்லை, தற்போது யாழ். நீதிமன்றம் இயங்குவதால் அங்கேயே இந்த வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கொழும்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட வேண்டுமானால், பிரதம நீதியரசரின் சிபார்சின் பேரில் நீதியமைச்சர் வர்த்தமானி பிரகடனத்தை வெளியிடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இவரது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதம நீதிவான் இவ்வழக்கை அடுத்த மாதம் 2ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினரின் நலன்களைக் கவனிக்க ஆஜரான சட்டத்தரணி குமார் பொன்னம்பலம், "இந்த வழக்கை அரசே வழக்குத் தொடுநராக இருந்து நடத்த வேண்டும், சட்டமா அதிபரே வழக்கைத் தொடர்ந்திருக்க வேண்டும். ஆனால் இன்று சட்டமா அதிபரின் பிரதிநிதி கூட இங்கு சமுகமளிக்கவில்லை. இச் செயல் அதிர்ச்சியையும், கவலையையும், வேதனையையும் தருகிறது என்றார்.

இவ்வழக்கு விசாரணைக்கு வெளிநாட்டுச் செய்தியாளர்கள், ஏராளமான சட்டத்தரணிகள், மனித உரிமை இயக்கப் பிரதிநிதிகள் நீதிமன்றம் வந்திருந்தனர். (இ-150-3)

## வவுனியாவில் பரீட்சைகள்

கொழும்பு, நவ. 21

வவுனியாவில் அகதிகள் தங்குவதற்காக கடந்த முதலாம் திகதி மூடப்பட்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கான வகுப்பேற்றுப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறும்.

தற்சமயம் இயங்கிக் கொண்டிருக்கும் பாடசாலைகளில் வகுப்பேற்றப் பரீட்சைகள் இம் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறும்.

(உ-150 - 3)


வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை - மானிப்பாய்

1997ஆம் ஆண்டிற்கான

## கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கு கேள்விகள் 1996 - 12 - 05 ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்களை பிரதேச சபையின் உப அலுவலகங்களில் இதன் கீழ்க் காணப்படும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டவாறு கேள்வி வைப்புப் பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப்பணத்தையும் செலுத்துவதன் மூலம் 1996 - 12 - 04 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைத் தவறாது கொண்டுவருதல் வேண்டும். கேள்விப் பத்திரம்கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பெற்று, "விசேட ஆணையாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, தலைமைச் செயலகம், மானிப்பாய்" என முகவரியிடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் 1996 - 12 - 05 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்னர் தவறாது எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைச் செயலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1996 - 12 - 05 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அத் தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதியோ சமுமளிக்கலாம்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபையின் தலைமைச் செயலகத்திலும், உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நகரமண்டபம்,
மானிப்பாய்.
1996-11-15

| உப அலுவலகம் | குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | நிர்ணயிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டினம்: | | | | | |
| 1. ஆட்டிறைச்சிக்கடை (சந்தை) | | 250/- | 1,000/- | 100/- | 40,000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை இல. (1) (சந்தை) | | 250/- | 1,000/- | 100/- | 75,000/- |
| 3. மாட்டிறைச்சிக்கடை இல. (2) (சந்தை) | | 250/- | 1,000/- | 100/- | 70,000/- |
| 4. மானிப்பாய் மத்திய சந்தை | | — | 1,000/- | 100/- | 1,00000/- |
| 5. கட்டுடை சந்தை | | — | 300/- | 100/- | 500/- |
| மானிப்பாய் கிராமம்: | | | | | |
| 1. சாவற்கட்டு சந்தை ஆனைக்கோட்டை | | — | 1,000/- | 100/- | 2,750/- |
| 2. நவாலி பிரசாத் சந்தை | | — | 1,000/- | 100/- | 16,000/- |
| 3. காக்கைதீவுச் சந்தை | | — | 1,000/- | 100/- | 3,850/- |
| 4. மாட்டிறைச்சிக்கடை | நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 65,000/- |
| 5. ஆட்டிறைச்சிக்கடை | நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1,000/- | 100/- | 20,000/- |
| 6. ஆட்டிறைச்சிக்கடை சாவற்கட்டு சந்தை | | 250/- | 1,000/- | 100/- | 20,000/- |
| 7. கருவாட்டுக்கடை | | 100/- | 500/- | 100/- | 1,000/- |
| பண்டத்தரிப்பு கிராமம்: | | | | | |
| 1. மாசியப்பிட்டிச் சந்தை | | — | 1,000/- | 100/- | 6,000/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை மாசியப்பிட்டிச் சந்தை | | — | 1,000/- | 100/- | 16,000/- |

(சி-3525)



அரசினர்

பொது (போதனா) வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

கேள்வி விளம்பரம்

## சலவை ஒப்பந்தம் - 1997

யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில் அழுக்குத் துணிகளை 01 - 01 - 1997 முதல் 31 - 12 - 1997 வரை சலவை செய்வதற்கான ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 06 - 12 - 96 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் உரிய பத்திரங்களில் இரு பிரதிகளாக நிரப்பி அனுப்பப்படல் வேண்டும். மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணமான 150/ ரூபாவை இவ்வைத்தியசாலைக் காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் இக் காரியாலயத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் நேரடியாகச் சேர்க்கப்படலாம். அல்லது ஒப்பந்தகாரர் விரும்பினால் கேள்விப்பத்திரங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பலாம். பதிவுத் தபால் மூலம் அனுப்பும் போது கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "சலவை ஒப்பந்தம்— 1997க்கான கேள்வி விளம்பரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்களை அவைகள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதிக்கு முதல் நாள் நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் என்னால் வழங்கப்படும் அதற்குரிய பத்திரங்களில் இல்லாவிடில் நிராகரிக்கப்படும். முடிவுத்திகதியன்று காலை 10-00 மணிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் பிணைப் பணமாக ரூபா 1500/- ஐச் செலுத்தி ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 06-12-1996 காலை 10-00 மணிக்கு எமது காரியாலயத்தில் திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் பிரசன்னமாயிருக்கலாம்.

எமது 10-10-1996 ஆம் திகதிய விளம்பரத்தின் படி ஏற்கனவே கேள்விப்பத்திரங்களைப் பெற்றவர்கள் அப்பத்திரங்களை இந்த விளம்பரத்திற்குரிய கேள்விக்குப் பயன்படுத்தலாம்.

மேலதிக விவரங்களை இவ்வைத்தியசாலைக் கணக்காளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
செல்வி. நவமலர் கனகரத்தினம்
பணிப்பாளர்

18 - 11 - 1996 (சி/3524)


## 41 - ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வு பெற்ற மாநகரசபை உத்தியோகத்தர்)

மலர்வு: **03 - 12 - 1935**
உதிர்வு: **08 - 10 - 1996**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய் இருந்து திடீரென எம்மை ஆறாத்துயரில் மூழ்க வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

எமது தந்தையின் மறைவின் போதும், இறுதி ஊர்வலத்தின் போதும், வருகை தந்து அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், மற்றும் பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியுடன் இன்று (21 - 11 - 96) வியாழக்கிழமை அவருடைய இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார்.

41, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை. (8982)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அலுமாரி, றாக்கை, அரை வட்ட ஓடு, தட்டச்சுயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, மரத் தளபாடங்கள், ஆட்டுக்கல், அம்மி, எவர்சில்வர், கிளாஸ், பீங்கான், பித்தளை, அலுமினிய வகைகள், G.I பத்தல், பூச்சாடிகள் மற்றும் பல. இல. 49, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (43729)

இறைச்சிக்கோழி சுத்தம் செய்து கொடுக்கப்படும். V.K.M. FARM, குமாரசாமி ஸ்ரோர்ஸ், கனகசபை லேன் சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். (43736)

### மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 24 வயது கேட்டை நட்சத்திரம் 2 இல் செவ்வாய் உள்ள A/L படித்த மணமகளுக்கு பட்டதாரி அரசாங்க உத்தியோகமுடைய மணமகன் தேவை. தகுதிக்கேற்ப சீதனம் வழங்கப்படும். தொடர்பு:- முருகன் திருமணசேவை, செ'விஜயரெத்தினம், ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடி, நவாலி கிழக்கு, மானிப்பாய். (43740)

### விற்பனைக்குண்டு

ஐஸ்கிறீம் மெஷின் [3 Horse Power] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 564, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (43730)

### நூலாலயம்

பெரியோர், இளைஞர், யுவதிகள், சிறுவர்களுக்கான பயன் தரும் புத்தகங்களைத் தெரிவு செய்து வாசிக்க, மகிழ லிங் லெண்டிங் லைப்ரறி 41, தபாலக வீதி, சாவகச்சேரி. Ling Lending Library (43650)

### மணிக்கூடு திருத்துதல்

சகல விதமான மணிக்கூடுகளும் சிறந்த முறையில், குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். பழுதடைந்த கடிகாரங்கள் உதிரிப்பாகத்திற்காக வாங்கப்படும். கஜன்ஸ் வாச் வேக்ஸ், 55, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு அருகாமை) (43712)

---

## வருகவென
# வரவேற்கின்றோம்!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின்
புதிய அதிபராகக் கடமையேற்கும்.

## உயர்திரு. க. இராஜதுரை

அவர்களை,

B. Ed. (Hons) Cey, B. A. (Pol. sc), PGDEM

21 - 11 - 1996 வியாழக்கிழமை இன்று மதிய போசன விருந்தளித்து, கௌரவத்துடன் வருகவென்று வரவேற்கின்றோம்.

ஆசிரிய வட்டம்

யாழ். மத்திய கல்லூரி. (சி-3526)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் அ. ஸ்ரீஸ்ராம்
அவர்களின் தந்தையாரான

## சிற்றம்பலம் அமரேசன்

(யாழ். /செங்குந்தா இந்துக் கல்லூரி பிரதி அதிபர்)

அவர்களின் மறைவையிட்டு அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
1994 A/L மாணவர்கள்.

(43741)

---

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை - நீர்வேலி
## 1997 ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தில் உள்ள பின்வரும் இறைச்சிக்கடைகள் சந்தைகளை 1997 - 01 - 01 முதல் 1997 - 12 - 31 வரை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கான அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் 02 - 12 - 1996 ஆம் திகதி மாலை 2-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை உரியபடி படிவக்கட்டணம், கேள்விவைப்புப்பணம் என்பவற்றை உரிய உப - அலுவலகங்களில் செலுத்தி 29 - 11 - 1996 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 04 - 12 - 1996 ஆம் திகதி காலை 10 மணிக்கு கோப்பாய் - உப அலுவலகத்தில் இயங்கும் தலைமைக் காரியாலத்தில் திறக்கப்படும்.

சித்திபெற்ற கேள்விக்காரர்கள் கேள்வித்தொகையின் 1/3 பங்கை உடன் செலுத்தி மாதாந்தம் 10 சம தவணைப்பணங்களாக மீதித்தொகையைச் செலுத்துதல் வேண்டும். இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

போதிய காரணங்களுக்காக கேள்விகளை நிராகரிக்கவோ, இரத்துச் செய்யவோ விசேட செயலாளருக்குப் பூரண அதிகாரம் உண்டு.

| இல. | குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்விப் பிணைப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1. | இறைச்சிக்கடைகள் | | | |
| | 1. உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 250-00 | 40,000/- |
| | 2. ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 25,000/- |
| | 3. நீர்வேலி மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 25,000/- |
| | 4. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை. | 150-00 | 500-00 | 1,50,000/- |
| | 5. புத்தூர்ச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 250-00 | 75,000/- |
| | 6. இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 250-00 | 60,000/- |
| | 7. கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 30,000/- |
| 2. | 1. உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 50-00 | 150-00 | 15,000/- |
| | 2. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 20,000/- |
| | 3. புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 50-00 | 100-00 | 2,000/- |
| | 4. இருபாலைச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 50-00 | 100-00 | 2,000/- |
| | 5. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100-00 | 150-00 | 01,900/- |
| 3. | சந்தைகள் | | | |
| | 1. உரும்பிராய் மத்திய சந்தை | 100-00 | 250-00 | 45,000/- |
| | 2 அச்சுவேலி பொதுச்சந்தை | 5 0 | 500-00 | 160,000/- |
| | 3 ஆவரங்கால் மரக்கறிச்சந்தை | 50 00 | 100-00 | 1,000/- |
| | 4 கோப்பாய் வடக்கு சந்தை | 50-00 | 100-00 | 1,500/- |
| 4. | மீன்சந்தை | | | |
| | 1. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 50-00 | 100-00 | 5,000/- |
| | 2. இருபாலை மீன் சந்தை | 50-00 | 100-00 | 2,000/- |
| 5. | 1. நீர்வேலி உப-அலுவலக வளவு | 10-00 | 25-00 | 250/- |

[illegible]
செயலாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி. 19-11-1996

(சி/3524)

---

# 31-ம் நாள் நினைவலைகள்



வையகத்தில்: 27 – 03 – 1930

வைகுந்தத்தில்: 22 – 10 – 1996

## செல்வி பூரணம் சுந்தரம்பிள்ளை

(பாலர் ஆசிரியை – மீசாலையம்பதி)

பிரியமுடன் ஆலயத் திருப்பணித் தொண்டுகளை
அரியவகை யேசெய்த அன்னையே, சோதரியே
பூரணமே அழகொளிர்ந்த நேசமிகு மலரே
தாரணியோர் தவித்திடவே தலைவன் தாள்
சேர்ந்தனையோ?


உமது பிரிவால் வாடும் தம்பிக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

கங்காணியார் முருகன் ஆலய
பரிபாலன சபையினர்,
மீசாலை.

(சி-3530)

---

## 3-ம் ஆண்டு
# நினைவஞ்சலி



அமரர்

## சின்னத்தம்பி சந்திரசேகரம்

(ஓய்வுபெற்ற P. W. D. ஓவசியர், R. M. C. R. D. A.)

திதி: 21–11–1996

உதயம்: 24–07–1929

அஸ்தமனம்: 25–11–1993

### திதி வெண்பா

ஆண்டு ஸ்ரீமுக ஆர்கார்த் திகைத் திங்கள்
காண்பூர்வ பட்சத் தேகாதசியில் — ஈண்டுபுகழ்
சந்திர சேகரச் சான்றோன் இணுவையழ
ஐந்துகரன் தாள்களடைந் தான்.

### எம் இனிய தலைவன்

''எங்கள் கடமை இதய சுத்தியுடன் நடப்பதும், இறைவனை ஏத்தி தொழுவதும் தான்; மிகுதி யாவும் அவன் பொறுப்பில் நிறைவாக நடக்கும்.'' இந்த உறுதிப்பாட்டினை எங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உருவேற்றி வைத்த ஒளிஞான தீபமே! பொருட்போதை, புகழ்ப்போதை முதலான எந்தப் போதைக்கும் இடமளிக்காது வாழ்ந்தவரே! நாமும் வாழவழி செய்த கலங்கரைவிளக்கே! தீபமணைந்தாலும் அதன் ஒளிக்கதிர்கள் அணையாது எங்கள் உள்ளங்களில் பளபளக்கின்ற அற்புதத்தை அனுபவிக்கின்றோம். உங்கள் நினைவில் விநாயகக் கடவுளையும், வேழமுகக் கடவுள் தியானத்தில் உங்கள் அருள் பொலியும் மலர்ந்த முகத்தையும் காண்கின்றோம். என்ன குறைச்சலை எமக்கு வைத்தீர்களென்று எண்ணிப்பார்க்கின்றோம்; எதுவுமே இல்லை, நீங்கள் எங்களுடன் இன்று இல்லாததைத் தவிர.

நீங்கள் மானிட உடம்போடு நடமாடிய இந்த வீடு பெற்ற பிரகாசம் நீங்கள் புகழுடம்போடு புகுந்த வானுலகிலும் பாய்ந்து, பரவ உங்கள் ஆன்மா இறையின்பத்தில் இடையீடின்றி மூழ்கி நிற்கும் பெருவாழ்வு சித்திக்க செகராஜசேகர விநாயகன் கழல்களைக் கைதொழுது நிற்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

(8986)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## வடிந்து ஓடும் நிதி உதவிகள்

அடுத்த வருடத்தில் இலங்கைக்கு சுமார் 4,730 கோடி ரூபா வெளிநாட்டு நிதி உதவி கிடைக்கப்போகிறது. கடந்த திங்கட்கிழமை பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவும் நாடுகளின் மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை அரசாங்கம் எதிர்பார்த்ததை விட இரண்டு சதவீதம் அதிகமானதாகும்.

பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்குறிப்பிட்ட மாநாட்டுக்குப் பாரிஸுக்குப் புறப்படுவதற்கு முன்னர், கிடைக்கவிருக்கும் உதவித் தொகை குறித்து ஓர் இலக்கு வைத்துக்கொண்டு செல்லவில்லை என்று தெரிவித்திருந்தார்.

பிரதி அமைச்சர் அப்போது தெரிவித்த கருத்து. இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கும் தொகை கிடைக்காமல் போகலாம் என்ற சந்தேகம் அவருக்கு உண்டு என்பதனையே புலப்படுத்தியது.

எனினும் எதிர்பார்த்ததை விட முன்னர் இணங்கப்பட்டதைவிட சற்று அதிமாகக் கிடைத்திருப்பது அரசுக்கு மனத்திருப்தியைத் தரும்.

ஆனால் —

இந்த நிதி உதவி கிடைத்ததால், சாதாரண பொது மக்களின் வாழ்க்கைத் தரம் முன்னேறும் என்றோ, அடிமட்ட மக்களின் வறுமை நிலை நீங்கும் என்றோ எதிர்பார்ப்பதற்கில்லை. நிதி உதவி அபிவிருத்திக்சென்றே வழங்கப்பட்டாலும் அதன் ஊடாக புதிய பல தொழில்துறைகள் ஆரம்பிக்கப்பட்டு, வேலை வாய்ப்பில்லாத இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழங்கும் வசதி கிடைக்கும் என்று நம்புவதற்கும் இல்லை.

இதற்கு முன்னர் கிடைத்த வெளிநாட்டு உதவிகள் பல. நிதித் தொகையும் எக்கச்சக்கம். ஆனால் மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்ததா? வறுமை நீங்கி விட்டதா? புதிய வேலை வாய்ப்புகள் பெருகினவா?

இல்லவே இல்லை! மக்களுக்கு மேலும் மேலும் பல கஷ்டங்களே பெருகின; தொடர்ந்து பல்கிப் பெருகி வருகின்றன. மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையை நலிவின்றி, கஷ்டமின்றி ஓட்ட முடியாமல் திணறுகிறார்கள் காலத்துக்குக் காலம் வாழ்க்கைச் செலவு உயர்ந்து மக்களை வாட்டுகிறது.

வெளிநாடுகளில் இருந்து கோடி கோடியாக நிதி உதவிகள் குவிந்து என்ன? அந்தத் தொகைகளை விடப் பல மடங்கு போருக்காகச் செலவிடப்படுகிறது. வருடாந்தம் போர்ச் செலவு அதிகரிக்கின்றது. பாதுகாப்புச் செலவு நீர் குடித்த பானை போல ஊதிப் பொருமுகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெய்யும் மழைநீர் குளங்களில், தேக்கங்களில் சேமிக்கப்படாமல் வீணே கடலில் போய் அவமாகுவது போல — வெளிநாட்டு உதவிகளும் போர் எனும் வடிகாலூடாகக் கரைந்து அவமாகிப்போகின்றன.

போர் நிறுத்தப்படும் வரை, நிரந்தர சமாதானமும் அமைதியும் தோற்றுவிக்கப்படும் வரை வெளிநாட்டு உதவிகள் நாட்டு முன்னேற்றத்திற்கு உதவ மாட்டா.

அரசாங்கம் இதனை நன்கு உணர்ந்து போரைத் தொடர்வது என்ற தனது அணுகு முறையை மாற்ற வேண்டும். இல்லையேல் மானத்தைதுறந்து வெளியாரிடம் இரந்தும் அதனால் பயன் விளையாது.

### மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

# நாடு முழுவதிலும் பாதுகாப்பு தீவிரம்!

கொழும்பு, நவ. 21

இன்று முதல் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரத்தையொட்டி தாக்குதல் எதுவும் நடைபெறலாம் என்பதால் கொழும்பு மற்றும் வடக்கு, கிழக்கு, வட — மத்திய மாகாணங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

அரச கட்டடங்கள், ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள், பாலங்கள் ஆகியவற்றில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

படையினர் மேற்கொண்ட தேடுதல்களில் அநுராதபுரம், கொழும்பு பகுதிகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

மாவீரர்வாரத்தையொட்டி படைகள் உயர்தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் இம்மாதப் பிற்பகுதியில் வருகிறது.

அந்தநாள் அணுகும் போது கூடுதலாக மிகவும் எச்சரிக்கையுடனும், விழிப்புடனும் இருக்கும்படி வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பாதுகாப்புப் படையினருக்கு கூறப்பட்டுள்ளது.

வீதித் தடைகளில் காவல் புரியும் துருப்புக்களும், பொலீஸாரும் வண்டி, வாகனங்களையும், அடையாள அட்டைகளையும் தவறாது சோதிக்கின்றனர்.

இவ்வாரத்தில் புலிப்படையினர் கிழக்கு மாகாணத்தில் தான் தாக்குதல் நடத்துவர் என நம்பப்படுகிறது என்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

(உ-3-150)

## வடக்கில் பல இடங்களில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ 21

பாதுகாப்புப் படையினர் யாழ்ப்பாணத்தில் பெருமளவு கைக்குண்டுகளைக் கண்டெடுத்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

கொழும்புத்துறைப் பகுதியில் படையினர் 467 கைக்குண்டுகளையும், ஆர். பி. ஜி. ஷெல் ஒன்றையும் கண்டெடுத்துள்ளனர்

நவாலிப் பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் தேடுதல் நடத்திய போது ரி 56 ரக துப்பாக்கி ஒன்றையும், அதற்கான மகஸீன்களையும், 3 ஆர். பி. ஜி. ஷெல்களையும், 4 குண்டுகளையும் கண்டெடுத்தனர்.

இதேசமயம் பொதுமக்களில் ஒருவர் வழங்கிய தகவலையடுத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட படையினர் மானிப்பாயில் 2 ஆயிரத்து அறுநூற்றுக்கும் அதிகமான துப்பாக்கிச் சன்னங்கள், 25 கண்ணிவெடிகள், 35 மோட்டார்க் குண்டுகள், பத்து வெடிமருந்துப் பாளங்கள், உள்ளூரில் செய்யப்பட்ட கைக்குண்டுகள் ஆகியவற்றைக் கண்டெடுத்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

### 83 இனக்கலவர சேதம்:

## 5 இலட்சம் ரூபா நஷ்டஈட்டை ஏற்க சிவசிதம்பரம் மறுப்பு

கொழும்பு, நவ. 21

1983 இனக்கலவரத்தின் போது சேதமாக்கப்பட்ட தமது வீட்டுக்கான நஷ்ட ஈடாக 'ரேபியா' மூலம் வழங்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபாவை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் ஏற்க மறுத்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக இவர் ரேபியா தலைவருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இனக் கலவரம் தொடர்பாக விசாரணை நடத்திய குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப இனக் கலவரத்தால பாதிக்கப்பட்ட சகல தமிழ் மக்களுக்கும. நஷ்டஈடு வழங்கப்படும் எனத் தாம் எதிர்பார்த்ததாகவும் —

அவர்களுக்கு நஷ்டஈடு வழங்காமல் தமக்கு மட்டும் அமைச்சரவை முடிவுப் படி நஷ்டஈடு வழங்கப்படுவதை ஏற்க முடியாது என்றும் —

அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளாராம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம். பிக்களான, வேறு முக்கியஸ்தர்கள் சிலர் 'ரேபியா' அமைப்பிடமிருந்து உரிய நஷ்டஈட்டை சிலவருடங்களுக்கு முன்னர், சத்தம் சந்தடியின்றிப் பெற்றுக் கொண்டு விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## குடாநாட்டில் விரைவில் உள்ளூராட்சித்தேர்தல்?

கொழும்பு, நவ. 21

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருவதாக அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் வாழும் தீவுப்பகுதி, வவுனியா தெற்கு, மன்னார் ஆகிய இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்த வாய்ப்பு உள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் கடந்த செப்டம்பர் 15 ஆம் திகதி சமர்ப்பித்தஅறிக்கையின் படி குடாநாட்டில் நாலு இலட்சத்து 12 ஆயிரத்து 938 பேர் உள்ளதாகவும் —

அங்குள்ள16 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல் நடத்தலாம் என்றும் —

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(உ-150-3)

### நாளை

கார்த்திகை 7

வெள்ளிக்கிழமை

திதி: துவாதசி

முற்பகல் 11.50வரை

நட்சத்திரம்: ரேவதி

முற்பகல் 11 33 வரை.

பிரதோஷ விரதம்

ராகுகாலம்: 10 41- 12.11

[illegible] 6.11 - 7.41

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## கட்டுநிதி வந்தது

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். மாவட்ட ஆசிரியர்களின் நவம்பர் மாதச் சம்பளத்துக்கான கட்டுநிதி நேற்றுக் கல்வித் திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டது.

(உ--51)3)

## எழுதுவினைஞர் பதவி உயர்வு பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 21

அரசாங்க,மாகாண அரசாங்க சேவையில் உள்ள பொது எழுதுநர் சேவையில் II ஆம் வகுப்பின் ''அ'' பிரிவுக்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றன.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இப்பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத்திணைக்களத்தினால் அந்தந்தத் திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(உ-3-51)

## மாவீரர் தினத்தில் பிரபா மக்கள் முன் வருவார்?

### பாதுகாப்பு வட்டாரங்கள் ஊகம்

மாவீரர் தினத்தை ஒட்டி தான் வழமையாக ஆற்றும் உரையை நிகழ்த்துவதற்காக கிளிநொச்சிக்குத் தெற்கே வவுனியாவிற்கு இடையில ஓரிடத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மக்கள் முன் தோன்றக்கூடும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

தான் தனது மக்களைக் கைவிட்டு விட்டு விலகி நிற்கவில்லை என்று காட்டுவதற்காக அவர் மக்கள் முன் தோன்ற விரும்புவார்.

—இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுவதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது

புதிய ஆரம்பம் குறித்து தமது உறுதிப்பாட்டையும், இழந்த மண்ணை மீட்கும் சூளுரையையும் அவர் இந்த உரையில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கலாம் எனவும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.

மாவீரர் தினம் எதிர்வரும், 27 ஆம் திகதி வருவது தெரிந்ததே. (உ)

### மூழ்கடிக்கப்பட்ட இடத்துக்கு

## 150 கி. மீற்றருக்கு அப்பால் 'டோறா' சிதைவுகள் மீட்பு

கொழும்பு, நவ. 21

கடந்த மாதம் 26 ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்துக்கு வெளியே கடற்கரும்புலித் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்ட கடற்படையின் பி - 457 இலக்க — 'டோறா' அதிவேகத் தாக்குதல் படகின் சிதைவுகள் திருகோணமலைக்குத் தென் கிழக்கே சுமார் 150 கிலோ மீற்றருக்கு அப்பால் பொத்துவில் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

மீனவர்கள் கொடுத்துள்ள தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் பாதுகாப்புச் செய்தியாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

'டோறா' படகு மூழ்கடிக்கப்பட்டதும் அச்சம்பவம் இடம்பெற்றதாகக் கருதப்படும் இடத்தை மீட்புப் படை அணிகள் கண்டுபிடித்தன அந்தக் கடற் பிரதேசத்தில் டோறாவின் எண்ணெய்க் கசிவுகள் பரந்து காணப்பட்டதுடன் அடியிலிருந்து கடல் மேல் மட்டத்துக்கு நீர்க்குமிழ்கள் தொடர்ந்து வந்து கொண்டிருந்ததும் மீட்பு அணியால் அவதானிக்கப்பட்டது. ஆனால் அப்பகுதியில் கடல் சுமார் அரைக் கிலோ மீற்றர் ஆழமுடையதாக இருந்ததால் டோறாவின் சிதைவுகளையோ, அது தகர்க்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த இரு கடற்படை அதிகாரிகள் உட்பட 12 படையினரினது சடலங்களையோ மீட்கும் முயற்சி கைவிடப்பட்டது.

தற்போது இச்சம்பவத்தில் உயிரிழந்த லெப்டினன்ட் எம். ஏ. எஸ். அமரசேகர என்ற கடற்படை அதிகாரியின் அடையாள அட்டையும் மற்றும் படகின் பல சிதைவுகளும் பொத்துவில் கடல் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. (உ)

## தென்மராட்சியில் மாணவர் சீருடைகள்

தென்மராட்சி, நவ. 21

தென்மராட்சி கல்விக்கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவசச் சீருடைகள் இன்று வியாழக்கிழமையும் நாளையும் கோட்ட அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளன.

அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் சீருடைத் துணிகள் கையளிக்கப்படவுள்ளதாக கோட்டக் கல்வி அலுவலர் இ. கணேசன் தெரிவித்தார்.

(அ-117)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 21

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் அலுவலகத் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8-30 மணியளவில் மானிப்பாய் வீதியிலுள்ள உடுவில் உபஅஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் இடம்பெறும்.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக சிவத்தமிழ்ச் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டியும் சிறப்பு விருந்தினராக ஆறு. திருமுருகனும் கலந்து கொள்வர். (உ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டபம் பகுதிக்கு வந்த இலங்கைத் தமிழ் அகதிகள்

சென்னை, நவ. 21

இலங்கையில் இருந்து மேலும் 14 குடும்பங்களைச் சேர்ந்த 59 தமிழ் அகதிகள் கடந்த சனிக்கிழமை இரு படகுகளில் தமிழ் நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் கரையோரத்தை வந்தடைந்தனர்.

இலங்கைப் படகுகளில் வந்த இந்த அகதிகள் நடுக்கடலில் வைத்து இராமேஸ்வரம் மீனவர்களுக்கு சொந்தமான மீன்பிடிப்படகுகளுக்கு மாற்றப்பட்டு மண்டபம் முகாம் ரயில் நிலையம் அருகே இறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் இராமேஸ்வரம் பகுதியிலேயே இலங்கை அகதிகள் வந்திறங்கியதாகவும் —

தற்போது முதல் தடவையாக மண்டபம் அருகே அகதிகள் வந்திறங்கியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

## இந்தியா 215 ஓட்டங்கள்

அஹமதாபாத், நவ. 21

தென் ஆபிரிக்க, இந்திய கிரிக்கெட் அணிகளுக்கிடையே நேற்று அஹமதாபாத்தில் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டம் முடிவடையும் போது இந்திய அணி 8 விக்கெட் இழப்பிற்கு 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. டெண்டுல்கர் 42. அசாருதீன் 35, சஞ்சய் மஞ்சரேக்கர் 34 ஓட்டங்களைப் பெற்றனர். கும்ளேயும் வெங்கடேஷ் பிரசாத்தும் ஆட்டமிழக்காமல் முறையே 13, 7 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

(உ-10)

பதுளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதையடுத்து இச் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது. (உ-3-10-150)

ஐ. நா. செயலாளர் நாயகமாக

# பூட்ரஸ் காலி பதவியில் நீடிப்பதை ‘வீட்டோ’ மூலம் அமெரிக்கா ரத்து!

## ஏனைய அனைத்து நாடுகளும் அவரை ஆதரித்தன

நியூயோர்க், நவ. 21

ஐக்கிய நாடுகள் சபையின் தற்போதைய செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ்காலி தொடர்ந்து இன்னொரு பதவிக் காலத்துக்கு - ஐந்து ஆண்டுகளுக்கு - அப்பதவியில் நீடிப்பதற்கான வாய்ப்பை தனது ‘வீட்டோ’ அதிகாரம் மூலம் அமெரிக்கா தள்ளுபடி செய்தது.

காலியின் பதவிக் காலம் வரும் டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையவிருக்கையில் —

அவரைத் தொடர்ந்து இன்னொரு பதவிக்காலத்துக்குப் பதவியில் அமர்த்த பல உலக நாடுகள் விரும்பின.

அதன் ஒரு நடவடிக்கையாக அவரைப் பதவியில் தொடர்ந்து அமர்த்துவது தொடர்பான பிரேரணை ஒன்று நேற்று முன்தினம் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் பத்து நாடுகளைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் நான்கு நிரந்தர உறுப்பு நாடுகளும் மற்றும் பத்து நாடுகளுமாக மொத்தம் 14 நாடுகள் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தன. அமெரிக்கா மட்டும் தனது ‘வீட்டோ’ அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்மானத்தைத் தோல்வியுறச் செய்தது.

பூட்ரஸ் காலியின் நாடான எகிப்து இந்த விடயத்தில் அமெரிக்கா ‘வீட்டோ’ அதிகாரத்தைப் பயன்படுத்தியது தவறு எனக் கருத்து வெளியிட்டது

அமெரிக்கா தவிர்ந்த ஏனைய அத்தனை நாடுகளின் ஆதரவும் காலிக்குக் கிடைத்திருப்பது அவரது சாதனைகளையும் ஐ நாவின் அவர்மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்களையும் யாவரும் ஏற்றுக் கொள்வதையே குறிக்கிறது என்றும் எகிப்து தெரிவித்துள்ளது.

காலி பதவியில் தொடர்வது நிறுத்தப்படவுள்ள நிலையில், அடுத்துத் தேர்ந்தெடுக்கப்படும் ஐ நா. பொதுச் செயலாளர் ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தவராகவே இருக்கவேண்டும் என எகிப்து அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளது. (உ-10)

ரத்வத்தையுடன் .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் உள்ள மக்கள்; தங்களுக்கு நீர்வசதியில்லை, மலசலகூட வசதியில்லை; இருப்பிட வசதி போதாது என்று தெரிவித்தனர்.

தங்களை ஒரு மாதகாலத்துக்கும் மேலாக முகாம்களுக்குள் அடைத்து வைத்துள்ளனர் என்றும் கூறிக் கண்ணீர் வடித்தனர்.

இது தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாகக் குழுவினர் உறுதியளித்தனர்.

வேறு சில முகாம்களுக்கும் சென்று அகதிகளுடன் பேசிய பின்னர் வவுனியா இராணுவ முகாமில் உயர்மட்ட மாநாடு ஒன்றை இக்குழுவினர் கூட்டினார்கள்.

‘‘முகாம்களில் தங்கியுள்ள நூற்றுக்கணக்கான தாய்மார்கள், கர்ப்பிணிகள், வயோதிபர்கள் ஆகியோர் எம்மைக் கண்டு கண்ணீர் வடித்தனர். திறந்தவெளிச் சிறைச்சாலை போன்று அவர்கள் அங்கு அடைத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்ணால் காணக் கூடியதாக இருந்தது

முகாமில் தங்கியிருக்கும் அவர்களில் பெரும்பான்மையானோர் தொற்று நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது — என்று குழுவில், சென்ற சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்

படை .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளும் மீறப்படுகின்றன. பல இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர். இன்னும் சிலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். கற்பழிப்புச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறான செயல்கள் தடுக்கப்பட வேண்டும்’’ — என்று ஈ.பி.டி.பி. எம். பிக்கள் கேட்டுக்கொண்டனர்.

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களின் தளபதிகள் முகாம்கள் ஒவ்வொன்றுக்கும் விஜயம் செய்து இப்படியான சம்பவங்கள் நடக்காமல் நடவடிக்கை எடுக்கும்படி பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேற்படி எம். பிக்களிடம் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் செயலணிக் குழுவின் கிளை அமைப்பது தொடர்பாக எடுத்துக் கூறிய ஈ. பி. டி பி எம். பிக்கள் செயலணிக் குழுவினர் வாகனங்களை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

அதற்குப் பதில் அளித்த பாதுகாப்புச் செயலாளர் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் செயலணியின் கிளை ஒன்றை அமைப்பதற்கான அனைத்து பாதுகாப்பு தரப்பு ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறினார்.

— கொழும்புப் பத்திரிகை ஒன்று இத்தகவல்களை வெளியிட்டது. (உ-3)

கொடிகாமத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் நேற்று அதிகாலை தனங்கிளப்புப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாக செய்தி ஒன்று தெரிவித்தது. ஆனால் அது பற்றிய மேலதிக விபரங்கள் தெரியவரவில்லை.

(உ-3-15-117)

# வவுனியா அகதிகள் உண்ணாவிரதம்

வவுனியாவில் அகதி முகாம்களில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் அந்த முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரி நேற்று வவுனியா நகரில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

வவுனியாவில் இடம் பெயர்ந்த மக்கள் நடத்தப்படும் முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று அதிகாலையில் இருந்தே அரசாங்க அதிபர் செயலகத்தின் முன் கூடி நிலத்தில் உட்கார்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களை இன்னல்களுக்குள்ளாக்குவதாக நேற்றைய போராட்டத்தை நடத்தியவர்கள் அரசைக் குற்றஞ் சாட்டினர். நாட்டில் இடம் பெயர்ந்து இருப்பவர்கள் கௌரவமாக நடத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் குரல் எழுப்பினார்கள்.

‘புளொட்’ அமைப்பின் தலைமையில் இந்தப் போராட்டம் நடந்தது.

கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்கள், முதியவர்கள், நலன்புரி நிலையங்களில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது உட்பட 9 கோரிக்கைகளை ‘புளொட்’ அமைப்பு முன்வைத்துள்ளது.

இந்த அகதிகள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டால், வவுனியாவில் உள்ள கடைகளைப் பூட்டி பெரிய அளவில் ஹர்த்தாலை நடத்த மக்கள் முயற்சி செய்கிறார்கள் என புளொட் பிரதிநிதி ஒருவர் கூறினார். (உ-3)

## வவுனியாவில் தாக்குதல்

வவுனியா நெலுக்குளம் பாதுகாப்பு அரண் பகுதி மீது நேற்றிரவு ஏழு மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர். படையினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரியவருகின்றது

புலிகளுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்குச் சென்று புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச் செல்வனைச் சந்தித்து விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கு தங்களின் ஆதரவைத் தெரிவித்தனர்.

சென்னை மற்றும் ஒரிஸாவில் உள்ள மால்கன்கிரி ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் தமது போராளிகள் சுமார் 300 பேரும் புலிகளுடன் இணைந்து போராடுவதற்குத் தயாராக இருப்பதாக அவர்கள் கூறினர்.

அவர்கள் இருவரும் இராமேஸ்வரத்திலிருந்து கள்ளத் தோணி மூலம் இரணைதீவை அடைந்தனர். அங்கிருந்து விடுதலைப் புலிகள் தமது படகு மூலம் இரகசிய இடத்துக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்கள் தமது பயணத்தின் போது உயிர் காக்கும் மருந்துப் பொருள்கள், செயற்கை உபகரணங்கள் ஆகியவற்றையும் எடுத்துச் சென்றனர்.

ஈ. என் டி.எல்.எவ் — விடுதலைப் புலிகள் சந்திப்பு அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்படுகின்றது.

இச்சந்திப்பை அடுத்து இலங்கையில் தமிழீழம் அடைந்தே தீருவது என்ற கொள்கையில் ஈ. என். டி. எல். எவ்வும் இணைந்துள்ளது.

இதற்காக தமிழகத்தில் நிதி திரட்டும் படலமும் ஆரம்பமானது: கடந்த சில நாட்களாக சென்னையில் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் ஆலோசனை நடந்தப்பட்டதாகவும் உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகளுடன் ஈ. என். டி. எல். எவ், கைகோர்த்துள்ளதை வெளிப்படுத்திய நிலையில் தாராளமான நிதி திரளுவதாகவும் தெரியவருகிறது.

ஈ. என். டி. எல். எவ்வினர் இலங்கை சென்று திரும்பியிருப்பது தமிழகக் கடற்கரையோரப் பகுதியில் தீவிரப் பாதுகாப்பு இல்லை என்பதையே காட்டுகிறது.

— இவ்வாறு ‘‘தினமணி’’ மேலும் தெரிவித்தது. (உ-3)

# மரண அறிவித்தல்கள்

## அமிர்தலிங்கம் யோகராஜா

ஊரெழு மேற்கைச் சேர்ந்த அமிர்தலிங்கம் யோகராஜா 19 - 11 - 96 இல் நீர்கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் கோண்டாவில் கிழக்கு காலஞ்சென்ற அமிர்தலிங்கம் - அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும், ஊரெழு காலஞ்சென்ற சுப்பிரமணியம், தவமணி ஆகியோரின் மருமகனும், சோதிமலரின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சிவராஜா, விமலராஜா [இத்தாலி], லலிதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மயூரன் [கனடா], அமுதா [ஜேர்மனி], மகிந்தன் [ஜேர்மனி], ஆகியோரின் அன்புத் தந்தையும், பூரணவதி, மனோன்மணி, இரத்தினசிங்கம் [அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்] ஆகியோரின் மைத்துனரும், ரதி [கனடா], கருணானந்தன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகன், காயத்திரி, ஜனார்த்தனி, கஸ்தூரி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20-11-96) நீர்கொழும்பில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இரத்தினசிங்கம் - ரகுராஜன்
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில் (8989)

## கந்தையா சின்னையா

(நெல்லியடி பட்டினசபை முன்னாள் அங்கத்தவரும், கட்டைவேலி, நெல்லியடி, ப. நோ. கூ. சங்க இளைப்பாறிய ஊழியரும்.)

வதிரி, கரவெட்டி வடக்கு காலஞ்சென்ற கந்தையா பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரர் கந்தையா சின்னையா அவர்கள் 20-11-1996 இல் காலமானார்.

அன்னார் பாறுபதி அவர்களின் அன்புக் கணவரும், செல்வி பத்மாவதி (காலஞ்சென்றவர்), பத்மநாதன் [பிரான்ஸ்], பத்மசோதி, பத்மசீலன், பத்மாசன் [பிரான்ஸ்], சப்தகுமார் (பிரான்ஸ்), பத்மசெல்வி, பாலமுருகன் (யா/பல்கலைக்கழக 3 ஆம் வருட முகாமைத்துவ மாணவன்), பாலாம்பிகை [டென்மார்க்], பாமதி ஆகியோரின் அன்புத்தந்தையும், மல்லிகா (பிரான்ஸ்), கணேசமூர்த்தி [கடற்தொழில் பரிசோதகர், பருத்தித்துறை], யோகநாதன், விஜயகுமார் [டென்மார்க்], கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்லாச்சி, மீனாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கதிர்காமத்தம்பி, தம்பிப்பிள்ளை, காலஞ்சென்ற குமாரசாமி, சிவயோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வாசினி, ஜனார்தன், கோபிநாத், வினோதராஜ், சிந்துஜா, திவாகர், பிரியங்கா, மதனதீபன், டினுஜா, கேசவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (21-11-96) காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. கணேசமூர்த்தி
மருமகன்)
சின்ன உடையார்வளவு,
வதிரி, கரவெட்டி (43748)

மேலும் மரண அறிவித்தல்கள் இரண்டாம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org